பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

08 02 2025 **SATURDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் பிஜேபி 27 ஆண்டுகளுக்கு பிறகு அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கிறது.

2. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் திரு சந்திரகுமார் முன்னிலை வகிக்கிறார்.

3. மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

4. பட்டப்படிப்பை முடித்த பெண்கள் போட்டித்தேர்வுகளில் வெற்றிபெற தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<>>>>

தில்லியில் பிஜேபி 27 ஆண்டுகளுக்கு பிறகு அறுதிப்பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று ஆட்சி அமைக்கிறது.

தில்லியில் 70 தொகுதிகளை கொண்ட சட்டப்பேரவையில் பிஜேபி 47 தொகுதிகளில் வெற்றிபெற்றது.

புதுதில்லி தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு. **Parvesh Sahib Singh** தமக்கு எதிராக போட்டியிட்ட ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலைவிட 4 ஆயிரத்து 89 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிபெற்றார்.

கல்காஜி தொகுதியில் தில்லி முதலமைச்சரும், ஆம் ஆத்மி கட்சியின் வேட்பாளருமான திருமதி அதிஷி 52 ஆயிரத்து 154 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

ஜங்புரா தொகுதியில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த முன்னாள் துணை முதலமைச்சர் திரு. மனீஷ் சிசோடியா தோல்வியடைந்தார்.

காங்கிரஸ் கட்சி போட்டியிட்ட அனைத்து தொகுதிகளிலும் தோல்வியை சந்தித்தது.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் வரலாற்று சிறப்புமிக்க மிகப்பெரிய வெற்றியை வழங்கியதற்காக மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சிறந்த நிர்வாகம் மற்றும் வளர்ச்சிக்கு கிடைத்த வெற்றி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

தில்லி சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நல்லாட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

பிஜேபி-யின் இந்த வரலாற்று சிறப்புமிக்க வெற்றியை அக்கட்சி தொண்டர்கள் பட்டாசு வெடித்தும், இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர்.

இதனிடையே, உத்தரப்பிரதேசத்தின் மில்கிபூர் சட்டப்பேரவைத்தொகுதி இடைத்தேர்தலில் பிஜேபி வேட்பாளர் திரு. **Chandrabhanu Paswan** ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 397 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

இவர், தமக்கு எதிராக போட்டியிட்ட சமாஜ்வாதி கட்சி வேட்பாளர் திரு அஜித் பிரசாதைவிட, 61 ஆயிரத்து 710 வாக்குகள் கூடுதலாக பெற்று வெற்றிபெற்றார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் திரு சந்திரகுமார் ஒரு லட்சத்து 14 ஆயிரத்து தொள்ளாயிரத்து 82 வாக்குகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

அவருக்கு அடுத்தப்படியாக நாம் தமிழர் கட்சி வேட்பாளர் திருமதி சீதா லட்சுமி 23 ஆயிரத்து தொள்ளாயிரத்து 40 வாக்குகள் பெற்றுள்ளார்.

<<<<<<>>>>

அறுபது ஆண்டுகள் பழமையான வருமானவரிச்சட்டத்திற்கு மாற்றாக புதிய வருமானவரி மசோதா அடுத்த வாரம் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட வாய்ப்புள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

தில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், வருமானவரிச் சட்டம் குறித்து வரி செலுத்துவோர் எளிதாக புரிந்துகொள்ளும் வகையில் இது உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

புதிய வருமானவரிச் சட்டத்தில் உள்ள பல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக 22 சிறப்பு துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் வகையில் சுங்கவரி சீர்திருத்த நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

முதலீட்டாளர்களுக்கும், வர்த்தகர்களுக்கும் உகந்த வகையில் சுங்கவரி முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<<>>>>

மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி தெரிவித்துள்ளார்.

சென்னை ஆளுநர் மாளிகையில் இன்று பழங்குடியினர் இளைஞர் பரிமாற்ற முகாமை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

தமிழ்மொழி தொன்மை வாய்ந்த மொழி என்று அவர் கூறினார்.

தமிழகம் அனைத்துத்துறைகளிலும் முன்னேறிய மாநிலமாக திகழ்வதாக அவர் தெரிவித்தார்.

பழங்குடியின மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதிலும் மத்திய அரசு முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பழங்குடியின மாணவ, மாணவியரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

<<<<<<>>>>

பெண்கள் தங்களது உடல் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என்று மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் புற்றுநோய் பரிசோதனை முகாமை தொடங்கிவைத்து பேசிய அவர், புற்றுநோய் பாதிப்பு தொடக்கத்திலேயே கண்டறியப்பட்டால் அதனை குணப்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கும் சத்தான உணவுகளை உண்ண வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மனிதர்களின் ஆயுட்காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

40 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் ஆண்டுக்கு ஒருமுறை முழுஉடல்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்றும் திருமதி கீதா ஜீவன் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>

பட்டப்படிப்பை முடித்த பெண்கள் போட்டித்தேர்வுகளில் வெற்றிபெற தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா கேட்டுக்கொண்டுள்ளார்.

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் உள்ள தனியார் பெண்கள் கல்லூரியில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி அவர் பேசினார்.

அரசின் திட்டங்களை அறிந்துகொள்வதற்கு கல்வி அவசியம் என்று அவர் கூறினார்.

எதிர்கால தலைமுறையினரை சிறந்த முறையில் உருவாக்குவதற்கு பெண்கள் சக்தி படைத்தவர்களாக திகழ வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

பெண்களுக்கான சமூக பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் மாநில அரசு திட்டங்களை திறம்பட செயல்படுத்தி வருவதாக திரு டி ஆர் பி ராஜா தெரிவித்தார்.

<<<<<<>>>>

ஊரகப்பகுதிகளின் மேம்பாட்டிற்கு, தமிழக அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் காரியாப்பட்டியில் 603 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் மக்களை சென்றடைவதற்கு அதிகாரிகள் உறுதுணையாக இருப்பதாக கூறினார்.

மாநில அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை பயன்படுத்திக்கொண்டு பெண்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று திரு தங்கம் தென்னரசு கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>

ராமநாதபுரம் மாவட்டம் பாம்பனில் 545 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள ரயில் பாலத்தின் செயல்பாடுகள் குறித்து இரண்டாவது முறையாக இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

செங்குத்து ரயில் பாலத்தின் வழியாக கடலோர காவல்படைக்கு சொந்தமான ரோந்து கப்பல் மூலம் அதன் செயல்பாடுகள் சோதித்து பார்க்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - கார்த்திகேயன் - 48 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழ்நாடு வேளாண் பல்லைக்கழகத்தில் உள்ள தாவரவியல் பூங்காவில் மலர் கண்காட்சியை மாநில அமைச்சர்கள் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம், திரு செந்தில் பாலாஜி ஆகியோர் இன்று தொடங்கிவைத்தனர்.

--------------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் சிறப்பு குறைதீர்ப்பு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறுமாறு ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

-----------------

நெல்லை மாவட்டத்தின் புதிய ஆட்சியராக மருத்துவர் சுகுமார் இன்று பதவியேற்றுக்கொண்டார்.

--------------------

மயிலாடுதுறை நகராட்சிக்கு உட்பட்ட மடக்குளம் பகுதியில் 68 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டுவரும் மேம்பாட்டுப்பணிகளை ஆட்சியர் திரு மகாபாரதி ஆய்வு செய்தார்.

----------------

கள்ளக்குறிச்சி மாவட்டம் கல்வராயன் மலைப்பகுதியில் இன்று தொடங்கி மூன்று நாட்கள் நடைபெறும் ஆதார் சிறப்பு முகாமை மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

-------------------

வேலூர் மாவட்டம் காட்பாடி ரயில் நிலையத்தில் பாதுகாப்பான ரயில் பயணம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

<<<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் சென்னை அணி இன்று ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

ஹைதராபாத் - முகமதன் அணிகளுக்கு இடையேயான மற்றொரு ஆட்டம் ஹைதராபாதில் தற்போது நடைபெற்று வருகிறது.

---------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் தமிழக அணிக்கு எதிரான காலிறுதி ஆட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் ஆட்டநேர இறுதியில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 264 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் டாஸ் வென்ற விதர்பா அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

---------------

மலேசியாவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான உலக மகளிர் டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த கமலினி-க்கும் தில்லியில் நடைபெற்ற ஆடவர் கோகோ உலக கோப்பையை வென்ற இந்திய அணியில் இடம்பெற்ற தமிழகத்தைச் சேர்ந்த சுப்பிரமணி-க்கும் தலா 25 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையை தமிழக அரசு அறிவித்துள்ளது.

----------

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை தோல்வியடைந்தது.

**<<<<<<END>>>>**